Written by Administrator
Thursday, 01 October 2009 04:39 -

□□□□□□□□30.09.2009

விருநகரில் ரோடு போட ரூ.5 கோடி அரசு நிதி மழைக்காலம் முடிந்தே பணி ஆரம்பிக்கும்

நகராட்சி கூட்டத்தில் தலைவர் அறிவிப்பு

விருதுநகர், செப்.30- விருதுநகரில் குண்டும் குழியுமாக உள்ள ரோட்டை சீரமைக்க அரசு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது. இதற்கான பணி மழைக்காலம் முடிந்து ஆரம்பிக்கும் என நகராட்சி கூட்டத்தில் தலைவர் காந்திகா தெரிவித்தார்.

விருதுநகர் நகராட்சி கவுன்சிலர்கள் கூட்டம் தலைவர் காந்திகா தலைமையில் நடந்தது. துணைத் தலைவர் காசிராஜன், ஆணையர் கல்யாணசுந்தரம்,நகராட்சி அதிகாரிகள் மற்றும் கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கவுன்சிலர்கள் பேசியதாவது:

பாலசுந்தரசாமி: நகராட்சியில் லாரிகள் பெயரில் லட்சக்கணக்கான பணம் செலவழிக்கப்படுகிறது. லாரிகளே அதிகம் ஓடாதபோது இவ்வளவு பணம் எப்படி செலவாகும்.

தலைவர்: குப்பை லாரி நின்றுவிட்டால் எவ்வளவு செலவழித்தாலும் இயக்க வேண்டியுள்ளது. அதனால் இவ்வளவு பணம் செலவாகிறது.

தெய்வதுரை: பாத்திமா நகரில் பெரிய வாறுகாலில் மண் அள்ளப்படுவதில்லை. மண்ணை அள்ளினாலும் மீண்டும் வாறுகாலிலேயே மண்ணைப் போட்டு விடுகிறார்கள்.

தலைவர்: மண் அள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

சுரேஷ்குமார்: ஒண்டிப்புலி வீதியிருந்து தண்ணீர் வரும் பணியைப் பார்ப்பது யார்.

தலைவர்: நான்கு வழிச்சாலை பணியைச் செய்பவர்கள்.

சுரேஷ்குமார்: இதில் மனம் பதிந்து முடிந்து இரண்டு மாத காலத்துக்கு தண்ணீர் சரியாக வந்த பிறகே கையெழுத்துப் போட வேண்டும்.

தலைவர்: எந்தனவே சொல்லியுள்ளோம்.

மாரியப்பன்: நகரில் 36 கவுன்சிலர்களையும் கண்டித்து தட்டு போர்டு வைக்கப்பட்டுள்ளது.இந்த போர்டு அனுமதி பெற்று வைக்கப்பட்டுள்ளதா. கவுன்சிலர்களை அரிக்க மாகப் பேசுகிறார்கள். முதலிலேயே இதைக் கண்டித்திருக்க வேண்டும். அதிகாரிகள் இதை ஏன் செய்ய வில்லை.

சுப்பதா: இந்த ஆண்டு நகராட்சி அடுக்கவு தண்ணீர் விலையேகம் செய்துள்ளது.

இவர்கள் விம்புக்கு தட்டி போர்டு வைத்துள்ளார்கள். போர்டு வைத்துள்ளவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தலைவர்: நகராட்சிக்கு எதிராக மக்களைத் தூண்டி விடுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆனையர்: ஆக்கிரமிப்புகளை நாம் எடுக்கலாம்.இந்த மாதிரி போர்டுகளை அகற்ற முடியாது.விழாக்கள் சம்பந்தமான பேனர்கள் போர்டுகளை விழாநடப்பதற்கு முன்பு வைக்கவேண்டும். விழா முடிந்து இரண்டு நாட்களில் எடுத்து விட வேண்டும். பொவிசாரும்,அரசும் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தலைவர்: விருதுநகரில் ரோடுகளை சீரமைக்க அரசு 5 கோடி ரூபாய் நிதி அளித்துள்ளது. இன்றும் சில இடங்களில் மேலும் 5 கோடி நிதி உதவி கிடைக்கும்.

இந்த நிதியை தார் ரோடு போட பயன்படுத்த வேண்டுமாதலால் மழைகாலம் முடிந்தும் பணிகள் நடக்கும். மேலும் நகரில் உள்ள சொகத்தொல்லை,குடிநீர்ப்பிரச்சனை, ரோடு பிரச்சனைகள் பற்றி கவுன்சிலர்கள் பேசினர்.

வெனிநடப்பு: முன்னதாக கூட்டம்தொடங்கிய துமு தங்களது வார்டுகளில் அடிப்படை வசதிகள் செய்யாத நகராட்சியைக் கண்டித்து கருமாரிராஜன், நிபா, முனிஸ்வரி வெளிநடப்பு செய்தனர். பின்னர் சிறிது நேரம் கழித்து வந்து கலந்து கொண்டனர்.